මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01.
ශ්‍රී ලංකාව

செயலகம், கொழும்பு 01.
இலங்கை

The Secretariat, Colombo 01.
Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700

ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823

වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: PFD/PMD/Domestic/Cir.04/2020

ඔබේ අංකය / உமது இல. / Your No.:

දිනය / திகதி / Date: 2020.11.09

**அரச நிதிச் சுற்றுநிருப இல: 04/2020**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் மற்றும்
அரசுடைமை கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**போட்டி அடிப்படையிலான விலைக் கேள்வி நடைமுறைகளின் கீழ் விலைக் கேள்விகளை சமர்ப்பிக்கும் அரச தொழில் முயற்சிகள் தொடர்பில் விசேட முன்னுரிமைகளை வழங்குதல்**

அரச தொழில் முயற்சிகளை வலுப்படுத்தும் நோக்குடன் அரசாங்கத்தின் நிகழ்கால கொள்கை வழிகாட்டல்களுக்கமைவாக, அரச நிறுவனங்களால் போட்டி ரீதியிலான விலைக் கேள்விகளின் அடிப்படையில் உள்நாட்டு நிதியை பயன்படுத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்யப்படும் போது அரச தொழில் முயற்சிகளினால் முன்வைக்கப்படும் விலைக் கேள்விகளுக்கு விசேட முன்னுரிமையை வழங்குவது தொடர்பில் 2020.10.19 ஆம் திகதியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதன்படி, அரச நிறுவனமொன்றில் போட்டி அடிப்படையிலான பெறுகை நடவடிக்கையின் போது அரச தொழில் முயற்சிகளினால் விலைக் கேள்வியொன்று முன்வைக்கப்படும் போது, அவ் விலைக் கேள்வி தொடர்பில் ஏனைய விலைக் கேள்விதாரர்களை விடவும் 15% விஷேட முன்னுரிமையொன்று வழங்கப்படல் வேண்டும். அரச நிறுவனமொன்றில் விலைக் கேள்வி மதிப்பாய்வின் போது, இவ்

விசேட முன்னுரிமையானது கருத்திற் கொள்ளப்படவேண்டியது, நிதி மதிப்பாய்வின் போது மாத்திரமேயாகும் என்பதுடன் தொழில்நுட்ப மதிப்பாய்வின் போது அவ்வாறான முன்னுரிமைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இம் முன்னுரிமை கிடைக்கப் பெறுவது, அரச தொழில் முயற்சியினால் முன்வைக்கப்படும் விலைக்கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளிற்கான உள்நாட்டு மூலப் பொருட்கள், உழைப்பு, மேந்தலைகள் போன்ற உள்ளீடுகளினால் உள்நாட்டுப் பெறுமதியை அதிகரித்துக் கொள்வதற்கான இயல்தகவு உண்டு என குறித்த பெறுகைக் குழுவானது திருப்தியடைந்தால் மாத்திரமேயாகும்.

03. 2020.10.09 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல 03/2020 இன் முதலாவது பந்தியிலே குறிப்பிடப்பட்டுள்ள கணனி மென்பொருள் மற்றும் வன்பொருள் தொழிற்றுறை, நிர்மானத் தொழிற்றுறை மற்றும் தளபாடம் மற்றும் தொடர்புடைய தயாரிப்புகள் போன்ற தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ள அரச தொழில் முயற்சிகளுக்கு அச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சிறப்பு முன்னுரிமைகள் ஏற்கனவே கிடைக்கப்பெறுகின்றமையால், இச் சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமைகளை பெறுவதற்கு அவற்றிற்கு இயலாது.

04. இச்சுற்றுநிருபம் தொடர்பான ஏதேனும் தெளிவுபடுத்தல்களை அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து 011-2484614 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்;

ஒப்பம்/ எஸ்.ஆர். ஆட்டிகல

திறைசேரியின் செயலாளர்

பிரதிகள்:-

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்